ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2080/64 - 2018 ජූලි මස 20 වැනි සිකුරාදා - 2018.07.20
*2080/64 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 4-3/ 10/ 2016/ FH33.
எனது குறிப்பு இல.: BER/ 4/ 5/ 2/ 75.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், 734ஏ – குடா பயாகலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள முதன்மை காணி இல. க. 4672 உடைய காணித் துண்டு இல. 1 இன் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: சமரப்புவத்தை; உரிமை கோருவோர் : மீன்பிடி சேவை நிலையத்திற்காக காணி எடுத்துக்கொள்ளல்; விஸ்தீரணம்: 0.0537 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந்திகதி மு. ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர் ,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2018, யூலை 16.

8 - 258

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 9/ 3/ 1/ 1/ 3/ 6.
காணி அமைச்சின் கடிதக்கோப்பு இல.: 4-3/4/2012/D-43.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் இல. 4, 2060/11 மற்றும் 2018.02.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இல. 1ஏ பக்கத்தில் குறிப்பிடப் பட்டிருந்த நிலஅளவீட்டு வரைபடத்தின் இல. 510028 (வலயம் - 04) மற்றும் 7 ஆம் பத்திரிகையில் துண்டு இல. 67 இல் அரசாங்கத்தினால் எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் விஸ்தீரணம் தட்டச்சுப் பிழை காரணமாக 0.03856 ஹெக்டயார் என பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவ் விஸ்தீரணம் மேற்குறிப்பிட்ட வரைபடம் மற்றும் துண்டு இலக்கத்தில் 0.3856 ஹெக்டயார் என திருத்தம் செய்யப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

1. **துண்டு இல. 67**
காணியின் பெயர்: கிதுல்வல கந்த; விபரம்: வீட்டுத்தோட்டம், 35 வயது 03 தேக்க மரங்கள், 28 தென்னை மரங்கள், 07 மா மரங்கள், 02 பலா மரங்கள் மற்றும் நிரந்தரக் கட்டிடம் மற்றும் ஒரு மலசல கூடம் என்பன உள்ளன; சொந்தக்காரர்: கிதுல்கலை, இஹலகம, இல. 47/7 இல் வசிக்கும் மொரவத்தகே கமலாவதீ; விஸ்தீரணம் : 0.3856 ஹெக்டயார்.

எச். எம். எல். எஸ். ஹேரத்,
பிரதேச செயலாளர்,
திவுலபிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலபிட்டிய,
2018, யூலை 13.

8 - 259/1

---

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/ 9/ 3/ 1/ 1/ 3/ 6.
காணி அமைச்சின் கடிதக்கோப்பு இல.: 4-3/4/2012/D-43.

காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் இல. 3, 2060/11 மற்றும் 2018.02.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இல. 2 ஏ பக்கத்தில் குறிப்பிடப் பட்டிருந்த நிலஅளவீட்டு வரைபடத்தின் இல. 510061 (வலயம் - 03) மற்றும் 3 ஆம் பத்திரிகையில் துண்டு இல. 04 இல் அரசாங்கத்தினால் எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் விஸ்தீரணம் தட்டச்சுப் பிழை காரணமாக 0.03186 ஹெக்டயார் என பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவ் விஸ்தீரணம் மேற்குறிப்பிட்ட வரைபடம் மற்றும் துண்டு இலக்கத்தில் 0.3186 ஹெக்டயார் என திருத்தம் செய்யப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

1. **துண்டு இல. 4**
காணியின் பெயர்: ஹலபெகந்த; விபரம்: வீட்டுத்தோட்டம்; சொந்தக்காரர்: எம். பீ. பெமானிஸ், நரியமுல்ல, மீரிகம; விஸ்தீரணம் : 0.3186 ஹெக்டயார்.

எச். எம். எல். எஸ். ஹேரத்,
பிரதேச செயலாளர்,
திவுலபிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலபிட்டிய,
2018, யூலை 13.

8 - 259/2

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: 6/3/7/15/21/6/23.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/285A.

காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2016.03.10 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 1957/22 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட க. கி. வ 531, குறைநிரப்பி இல. 34, பத்திரம் 34 இல் துண்டு இல. 1689 இனது விஸ்தீரணம் 0.033788 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனது விஸ்தீரணம் 0.0337 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆத்மா தில்ருக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2018, யூலை 04.

8 - 260

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.